2016 பிப்ரவரி 18]

மாண்புமிகு அம்மா அவர்கள், 'முழுமையாக இ.எஸ்.ஐ. மருத்துவமனைகளை மத்திய அரசாங்கம் கட்டித் தந்து, அதை மாநில அரசாங்கத்திடம் ஒப்படைக்குமேயானால், அதை ஏற்றுக்கொள்வதற்கு தயார்' என்று தமிழ்நாடு அரசின் சார்பாக தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த வகையிலேதான், இ.எஸ்.ஐ. மருத்துவமனைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அதேபோன்று, காங்கிரஸ் கட்சியினுடைய ஆட்சிக் காலத்திலே இ.எஸ்.ஐ. மருத்துவமனை அமைக்க நிதி ஒதுக்கப்பட்டதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மத்தியில் பல்வேறு கட்சிகளை உள்ளடக்கி காங்கிரஸ் தலைமையில், கூட்டணி ஆட்சி நடைபெற்றபோது, மத்திய அமைச்சர்கள் பல்வேறு திட்டங்களை அறிவித்தார்களே தவிர, அந்த அறிவிப்புக்குண்டான எந்தவிதமான செயல்பாட்டையும், நிலைப்பாட்டையும் அவர்கள் எடுக்கவில்லை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபொழுது, கன்னியாகுமரி மாவட்டத்திலே இ.எஸ்.ஐ. மருத்துவமனை அமைக்க இடம் தரப்பட்டால், அது நடைமுறைக்கு வரும் என்று சொன்னார்கள். அதற்கான கள ஆய்வு செய்து, உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 64, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

64—

அங்கன்வாடி மையக் கட்டடம்

***55374—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஒன்றியம், கண்ணாமூச்சி, தார்காடு பகுதிகளிலுள்ள அங்கன்வாடி மையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

[2016 பிப்ரவரி 18

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஒன்றியம், கண்ணாமூச்சி, தார்காடு பகுதிகளில் மூன்று அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் கண்ணாமூச்சி மற்றும் தார்காடு மையங்கள் அனைத்து வசதிகளுடன் அரசுக் கட்டடத்தில் நல்ல நிலையில் இயங்கி வருவதால், இந்த மையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்குத் தேவை எழவில்லை. கண்ணாமூச்சி பகுதியிலுள்ள உப்புக்கல்லூர் மையத்திற்கு புல எண் 277/2–ல் இடம் தேர்வு செய்யப்பட்டு, ஊரக வளர்ச்சி முகமைமூலம் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

முற்பகல் 10–25

திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்களுடைய கேள்விக்கு, அங்கே வேலை நடந்து கொண்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

ஆரணி தொகுதி, தேவிகாபுரம், நாவல்பாக்கம், கொங்கராம்பட்டு, ஆதனூர் காலனி, மாமண்டூர், மட்டதாரி காலனி போன்ற பகுதிகளிலே அங்கன்வாடி கட்டடங்கள் புதிதாகத் தேவைப்படுகின்றன. அங்கே இருக்கக்கூடிய குழந்தைகள் வாடகைக் கட்டடத்திலே தங்கிப் படிக்கின்றார்கள். 2014–2015 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையிலே பேசுகின்றபொழுது மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ‘சட்டமன்ற உறுப்பினர்கள் நிதியிலிருந்து கட்டிக்கொள்ளலாம்’ என்று கூறினார். என்னுடைய சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து 5 ஆண்டுகளிலே முழுவதுமாக அங்கன்வாடிக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு இருக்கின்றன. கூடுதலாக இந்த இடங்களுக்கு அங்கன்வாடிக்

2016 பிப்ரவரி 18]

கட்டடங்கள் தேவைப்படுவதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இருக்கின்ற காலங்களிலே அதற்கான உத்தரவைப் பிறப்பிப்பதற்கு வழிவகை இருக்கின்றதா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இருக்கிற காலங்களிலே' கிடையாது; 'இருந்த காலத்திலேயே' மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 15,313 அங்கன்வாடி மையங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு 601 கோடியே 91 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து, (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 'இருக்கும் காலத்தில்' அல்ல; மாண்புமிகு அம்மா அவர்கள்தான் எந்தக் காலத்திலேயும் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக இருந்து திட்டங்கள் தீட்டுவார் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 65, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

65—

பல்கலைக்கழக இருக்கை

***56277—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரியார் பல்கலைக்கழகத்தில் தந்தை பெரியார் பெயரில் "இருக்கை" உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தந்தை பெரியார் அவர்களுடைய நினைவாக, பெரியார் பல்கலைக்கழகம் சேலம் மாவட்டத்தில் செயல்பட்டு வருகிறது. சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய நான்கு